Registered as a NewsPaper

# ஈழநாதம்

Eelanatham

மக்கள் நாளிதழ்

பக்கங்கள் - iv

நாதம் 14 திருவள்ளுவர் ஆண்டு 2034 ஆடி - 09 25-07-2003 வெள்ளிக்கிழமை ஓசை 157




# குரங்குப்பாஞ்சான் புலிகளின் முகாம் குறித்த கண்காணிப்புக்குழு முடிவு புலிகளால் நிராகரிப்பு

## ரெலவ்சனின் வன்னி விஜயம் ரத்து

**திருகோணமலை குரங்குப்பாஞ்சான் பகுதியில் புலிகளால் அமைக்கப்பட்ட முகாமை அகற்றிவிடுமாறு போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழு எடுத்த முடிவினை விடுதலைப்புலிகள் நிராகரித்துள்ளனர். இந்நிலையில் போர் நிறுத்தக் கண்காணிப்புக்குழுத் தலைவரின் வன்னிக்கான விஜயம் இரத்துச் செய்யப்பட்டதாகக் கண்காணிப்புக் குழு அறிவித்துள்ளது.**

இது குறித்து போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் பேசவல்ல அதிகாரியான ஆர்னெஸ் பிரபடோஸ் பி.பி.ஸி.க்கு கருத்து வெளியிடுகையில், எமது திட்டங்கள் மாற்றப்பட்டுவிட்டன. அங்கு புதன்கிழமை செல்வதாக திட்டமிட்டிருந்தது. ஆனால், இப்பொழுது மாற்றப்பட்டு விட்டது. விடுதலைப் புலிகளின் தலைமையகத்திலிருந்து போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுத் தலைவர் மேஜர் ஜெனரல் ரெலவ்சனுக்கு இது தொடர்பாக சாதகமற்ற பதில் கிடைத்ததை யடுத்து இந்தத் திட்டம் கைவிடப்பட்டது. கண்காணிப்புக் குழுவின் தீர்ப்பினை ஏற்க முடியாது என்று புலிகளின்

(iv ஆம் பக்கம் பார்க்க)

## திருமலையில் வெகுஜன அமைப்புக்கள் நாளை ஹர்த்தாலுக்கு அழைப்பு

சுற்றி வளைப்பு, கறுப்பு யூலைக்கான கண்டனம், போர்நிறுத்த ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டு 18 மாத காலமாகியும் பிரச்சினைக்கு தீர்வு காணப்படாமை போன்ற விடயங்களை முன்வைத்து திருமலையில் நாளை ஹர்த்தால் அனுஷ்டிக்குமாறு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.மேற்படி அழைப்பை திருமலை வெகுசன ஒன்றியம், மாணவர் அமைப்பு, இளைஞர் அணி மற்றும் மகளிர் அணி என்பன மேற்கொண்டுள்ளன. இந்த ஹர்த்தாலை அனைத்து தரப்பினரும் கடைப்பிடிக்க வேண்டும் என்று நான்கு அமைப்புக் களும் வேண்டுகோள் விடுத்துள்ளன.

## நுணாவில், தனங்கிளப்பு பகுதிகளில் புதிய காவலரண்கள் அமைப்பு

(யாழ்ப்பாணம்)

சாவகச்சேரி நகரப் பகுதியிலும், அதனை அண்டிய பகுதிகளான நுணாவில், தனங்கிளப்பு போன்ற பிரதேசங்களிலும் அண்மைக் காலங்களில் புதிய காவலரண்களும், பதுங்குகுழிகளும் படையினரால் அமைக்கப்பட்டு வருவதை அவதானிக்கக்கூடியதாகவுள்ளது. குறிப்பாக சாவகச்சேரிச் சந்தியில் அமைந்துள்ள ஈ.பி.டி.பி அலுவலகத்தின் இருமருங்கிலும் புதிய பாரிய படைமுகாங்கள் அமைக்கப்பட்டு படையினரும் ஈ.பி.டி.பி. யினரும் இணைந்து காவல்கடமையில் ஈடுபட்டு வருகின்றனர். அத்துடன் தென்மராட்சிப் பிரதேச செயலர்

(iv ஆம் பக்கம் பார்க்க)

## புலிகளின் பதில் கிடைத்ததும் விரைவில் பேச்சுக்கள் ஆரம்பமாகும்

### அமைச்சர் ஜீ. எல் பீரிஸ்

இடைக்கால நிர்வாகம் பற்றிய அரசாங்கத்தின் யோசனைகள் நோர்வே விசேட பிரதிநிதி ஜோன் வெஸ்போர்க் ஊடாக விடுதலைப் புலிகளிடம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன. இது தொடர்பாக விடுதலைப் புலிகளின் பதில் கிடைத்ததும் கூடிய விரைவில் சமாதானப் பேச்சுக்கள் மீண்டும் ஆரம்பமாகும் என்று அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ் தெரிவித்தார். அமைச்சரவைத் தீர்மானங்கள் பற்றி அறிவிப்பதற்கான ஊடகவியலாளர் மாநாட்டில் நேற்று பேசுகையில் அவர் மேலும் கூறியதாவது; யுத்த நிறுத்த ஒப்பந்தம் கைச்சாத்திடப்படுவது தொடர்பாகப் பின்பற்றப்பட்ட வழிமுறைகளையே இடைக்கால நிர்வாகம் தொடர்பான யோசனைகளை விடுதலைப் புலிகளுக்கு அனுப்பி வைப்பது தொடர்பாகவும் அரசாங்கம் பின்பற்றியது. இதன்படி அரசின் யோசனைகள் நோர்வே அரசின் ஊடாக தயாரிக்கப்பட்டு விடுதலைப் புலிகளிடம் தற்போது சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. இதற்கு விடுதலைப் புலிகள் அளிக்க விருக்கும் பதில் எதிர்காலப் பேச்சுக்கான நிரந்தர அடித்தளமாக அமையும் என்று அரசாங்கம் நம்புகின்றது என்றார்.

## அம்பாறை - கொழும்பு வீதியில் புதிய 4 சோதனைச்சாவடிகள்

(அம்பாறை)

அம்பாறை - கொழும்பு வீதியில் புதிதாக நான்கு சோதனைச் சாவடிகள் அமைக்கப்பட்டு நள்ளிரவு வேளைகளில் சோதனைகள் நடைபெற்று வருகின்றன.புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் பின்னர் அகற்றப்பட்டிருந்த இச் சோதனைச் சாவடிகள் மீண்டும் ஏற்படுத்தப்பட்டு சோதனை நடத்தப்படுவது குறித்து பயணிகள் கடும் விசனம் தெரிவித்துள்ளனர்.

## மட்டக்களப்பு மாவட்டத்தில் வைரஸ் காய்ச்சல் பரவுகிறது

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டத்தில் கடந்த சில நாட்களாக வைரஸ் காய்ச்சல் பரவி வருவதாக அறிவிக்கப்படுகிறது. வைத்தியசாலை வட்டாரங்களின் தகவலில் வைரஸ் காய்ச்சலினால் பாதிக்கப்பட்ட நூற்றுக்கணக்கான நோயாளிகள் தினமும் சிகிச்சைக்காக அனுமதிக்கப்படுவதாக தெரிவித்தன.

தற்போது நிலவும் வரட்சியான காலநிலை காரணமாக இந்தக் காய்ச்சல் ஏற்பட்டுள்ளது.ஒரு வாரம் தொடக்கம் இரண்டு வாரங்கள் வரை வைரஸ் காய்ச்சல் நீடிப்பதாகவும் நோயாளிகளுக்கு இருமல், தொண்டை நோ ஏற்படுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது. குழந்தைகள் மற்றும் சிறுவர்களே அதிகம் இந்தக் காய்ச்சலினால் பாதிக்கப்பட்டுள்ளனர்.

## பாரா.ளு. கண்காணிப்புக்குழுத் தலைமையை எதிர்க்கட்சிகளுக்கு வழங்கத் தீர்மானம்

### சிறிலங்காப் பிரதமர் ரணில் அறிவிப்பு

(கொழும்பு)

நாட்டின் அபிவிருத்திக்கு எதிர்க்கட்சியின் ஒத்துழைப்பைப் பெற்றுக்கொள்ளும் நோக்கத்துடன் பதினான்கு பாராளுமன்ற கண்காணிப்புக் குழுக்களின் தலைவர் பதவிகளை எதிர்க்கட்சிக்கு வழங்க அரசாங்கம் தீர்மானித்துள்ளதாக சிறிலங்காப் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க நேற்றுத் தெரிவித்தார்.தான் பின்பற்றும் சனநாயக மற்றும் பேதமற்ற அரசியல் முறைக்கு அமைய இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டதாக நேற்று பாராளுமன்றத்தில் இடம்பெற்ற கட்சித் தலைவர்கள் கூட்டத்தில் அவர் கூறினார்.இந்தக் கண்காணிப்புக் குழுக்களுக்கு பரந்த அதிகாரங்கள் வழங்கப்படும். ஆகையால் இந்தச் சந்தர்ப்

(iv ஆம் பக்கம் பார்க்க)

## இடைக்கால நிர்வாகவரைவு குறித்து ஆராய கதிர்காமர் தலைமையில் குழு

### சிறிலங்கா சுதந்திரக் கட்சி நியமித்தது

சிறிலங்கா அரசு விடுதலைப் புலிகளுக்கு அனுப்பிவைத்துள்ள இடைக்கால திட்டவரைவு குறித்து ஆராய சிறிலங்கா சுதந்திரக்கட்சி குழு ஒன்றை நியமித்துள்ளது. முன்னாள் வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் தலைமையிலான இந்தக் குழுவில் எதிர்க்கட்சித் தலைவர் மகிந்தராஜபக்ஷ பாராளுமன்ற உறுப்பினர்களான நிமால் சிறிபாலடிசில்வா, சுனில்பிரேம்ஜெயந்த ஆகியோர் இடம்பெற்றுள்ளனர். இடைக்கால நிர்வாக சபைக்கான திட்ட வரைவு அடங்கிய ஆவணம் கடந்த திங்கட்கிழமை

(iv ஆம்பக்கம் பார்க்க)

## மன்னார் நகரப் பகுதியில் 5 வர்த்தக நிலையங்களில் கொள்ளை

(மன்னார்)

மன்னாரில் பொலிசாரின் கட்டுப்பாடு நிலவும் நகரப் பகுதியில் ஐந்து பிரபல வர்த்தக நிலையங்களில் கொள்ளையிடப்பட்டுள்ளது. இதன்போது கூறைச்சேலை, ரீசேட், வாகனப் பொருட்கள் உட்பட பல பொருட்கள் கொள்ளையிடப்பட்டுள்ளன.இது தொடர்பாக மன்னார் வர்த்தக சங்கம் ஊடாக பொலிசாரிடம் முறையிடப்பட்டுள்ளது. (மி)

## நீர்மட்டம் குறையும் பகுதிகளுக்கு றோலர்களை எடுத்துவர நிர்ப்பந்திக்கும் கடற்படையின் செயல் குறித்து முறையீடு

(யாழ்ப்பாணம்)

வடமராட்சி கடற் பிரதேசத்தில் கடற்படையினர் மீனவர்கள் மீது திணித்துவரும் திட்டமிட்ட அடாவடித்தனம் தொடர்பாக வடமாகாண கடற்றொழிலாளர் சமாசத் தலைவர் தவரெட்ணம் போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவினருக்கு முறைப்பாடு செய்துள்ளார்.

வடமராட்சி கடற்றொழிலாளர்களின படகுகளைத் தாம் சோதிப்பதற்காக நீர் மட்டம் அடிக்கடி குறைந்து போகும் கடற்கரைப் பகுதிக்கு றோலர்களை இழுத்து வந்து நிறுத்த வேண்டும் என்றும், அதனைத் தாம் தொடர்ந்தும் பரிசோதிப்பதற்காக ஏற்ற நடவடிக்கைகளில் ஈடுபட வேண்டும் என்று படையினர் உத்தரவிட்டு எச்சரித்தது தொடர்பாகவே இந்த முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. ஏனெனில், இவ்வாறான நீர் மட்டம் குறைந்த பகுதிகளில் பெரிய இழுவைப் படகுகளைக் கொண்டு வந்து நிறுத்தும்போது நீர் மட்டம் குறைந்திருப்பது காரணமாக மீண்டும் பெரிய இழுவைப் படகுகளை கடலுக்குள் கொண்டு செல்வதற்கு

(iv ஆம் பக்கம் பார்க்க)

### - இந்திய றோலர்களைத் தடுக்க முயன்ற -

## வடமராட்சி மீனவர் இரவை கடலில் கழித்த அவலம்

(யாழ்ப்பாணம்)

வடமராட்சி வடக்கு கடற்பரப்பிற்குள் கடந்த 23 ஆம் திகதி பெரும் எண்ணிக்கையான இந்திய றோலர்கள் அத்துமீறி நுழைந்து மீன்பிடித் தொழிலில் ஈடுபட்ட இவர்களைத் தடுத்து நிறுத்தும் நோக்கில் கடலுக்குச் சென்ற வடமராட்சி வடக்கு மீனவர்கள் இரவுப்பொழுதை கடலில் கழிக்க வேண்டிய அவலநிலை ஏற்பட்டது. சிறிலங்கா கடற்படையினர் விதித்துள்ள மீன்பிடித் தடையினாலேயே இந்நிலை மீனவர் களுக்கு ஏற்பட்டதாக வடமராட்சி வடக்கு கடற்றொழிலாளர் சங்க சமாசத்தின் செயலாளர் தெரிவித்துள்ளார். இரவு 8மணியளவில் இந்திய றோலர்

(iv ஆம் பக்கம் பார்க்க)

## வரி விளம்பரம்

**ஆடி அமாவாசை தீர்த்த உற்சவம்**

புதுமுறிப்பு கற்பக விநாயகர் ஆலயத்தில் வழமைபோல ஆடி அமாவாசை தீர்த்த உற்சவம் 28.07.2003 திங்கட்கிழமை காலை 8 மணிக்கு நடைபெறும் பிதிர்க்கடன் செய்வதற்கு உரிய ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளது. ஆலய பரிபாலனசபை (3569)

**Amal Dental Works**

இரணைப்பாலை வீதி, புதுக்குடியிருப்பு, முல்லைத்தீவு என்ற முகவரியில் இருந்த அமல் பல்கட்டும் நிலையம் பரந்தன் வீதிக்கு மாற்றப்பட்டுள்ளது. இங்கே பல் கட்டுதல், பல் கிளிப் போடுதல் என்பவற்றினை உடன் செய்து கொள்ளலாம். (3458)

## துயர் பகிர்கின்றோம்

அமரர்

### *திரு. வைத்திலிங்கம் செல்லையா*

திரு.செலலையா கந்தசாமி(வங்கியாளா, மக்கள் வங்கி கிளிநொச்சி) அவர்களின் அன்புத்தந்தை வைத்திலிங்கம் செல்லையா 19-07-2003 அன்று சிவபதம் அடைந்த செய்தியை அறிந்து மனத்துயரம் அடைந்தோம். அன்னாரின் பிரிவால் துயர் அடைந்துள்ள மகன் மற்றும் பிள்ளைகள், மனைவி, உறவினர்களுக்கு எமது ஆழ்ந்த கவலையைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

ரம்மியமைதிலி
(செந்தூரன் களஞ்சியம்)
கண்டிவீதி-கிளிநொச்சி.
"சுபாஜின உரவாணிபம்"
திண்ணன், யாழ்.வீதி.


# நிரந்தர நியமனமின்றேல் 3ம் தவணை முதல்

# பகுதிநேர ஆங்கில ஆசிரியர் பகிஷ்கரிப்பு

## பகுதி நேர ஆங்கில ஆசிரியர்கள் நிரந்தர நியமனம் கோரல்

பகுதிநேர ஆங்கில ஆசிரியர்களாகிய எமக்கு உடனடியாக நிரந்தர நியமனம் வழங்கப்பட வேண்டும். தவறின் 3ஆம் தவணை ஆரம்பம் முதல் பாடசாலை பகிஷ்கரிப்பில் ஈடுபட உள்ளோம் என வவுனியா மாவட்டப் பகுதி நேர ஆங்கில ஆசிரியர்கள் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. அவ்வறிக்கையின் விபரம் பின்வருமாறு;

பகுதிநேர ஆங்கில ஆசிரியர்கள் ஆகிய நாங்கள் மணித்தியாலத்திற்கு ரூபா 40.00 வீதம் நாளொன்றிற்கு இரண்டு மணித்தியாலங்கள் (02) ரூபா 80.00 அதிக பட்சக் கொடுப்பனவாக (மாதாந்தம் ரூபா 1600.00 மட்டும்) பெற்றும், வலயக் கல்விப் பணிப்பாளரின் வேண்டுகோளுக்கு இணங்கவும் எமது மாவட்டத்தின் கல்வி நிலையைக் கருத்திற் கொண்டும், சேவையினை நோக்கமாகக் கொண்டும் நிரந்தர ஆசிரியர்கள் போன்று முழு நேரமாக அர்ப்பணிப்புடன் சேவையாற்றிக் கொண்டிருக்கிறோம். ஆனால் எமது மாவட்டத்தின் கற்பித்தல் செயற்பாட்டிற்கு 328 ஆங்கில ஆசிரியர்கள் தேவையாக உள்ளது. ஆனால் 80 ஆங்கில ஆசிரியர்களுடன் எமது மாவட்டப் பாடசாலைகள் இயங்கிக் கொண்டிருக்கின்றன. மேலும் ஆங்கில ஆசிரிய வெற்றிடங்கள் நிரப்புவதன் பொருட்டு ஏறத்தாழ 100 க்கும் அதிகமான பகுதிநேர ஆங்கில ஆசிரியர்கள் சேவை நோக்கத்தோடு கடமையாற்றிக் கொண்டிருக்கின்றார்கள்.

ஒப்பந்த அடிப்படையில் சேவையாற்றிக் கொண்டிருக்கும் பகுதிநேர ஆங்கில ஆசிரியர்களுக்கு நிரந்தர நியமனம் வழங்குவதற்கான நேர்முகப் பரீட்சைக்கு க.பொ.த(சா/த) பரீட்சையில் ஆங்கிலத்தில் விசேட சித்தியும்,க.பொ.த(உ/த)ப் பரீட்சையில் 3 பாடங்களில் சித்தியடைந்தவர்களும் அழைக்கப்பட்டார்கள்.ஆனால் இற்றைவரையில் இந் நேர்முகப் பரீட்சை தொடர்பாக எதுவித ஆக்க பூர்வமான நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.

எமது கடந்தகால சேவையினைக் கருத்திற் கொண்டு எமக்குக் குறுகிய காலத்தில் நிரந்தர நியமனம் வழங்கப்படாத பட்சத்தில் எமது சேவையினை வரும் 3ம் தவணை ஆரம்பத்திலிருந்து இடை நிறுத்திக் கொள்ள வேண்டிய துர்ப்பாக்கிய நிலைக்குத் தள்ளப்படுவோம் என்பதனை மிகவும் மனவருத்தத்துடன் அறியத்தருகின்றோம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (10)


# மேற்பார்வையாளர் பணிக்கான நேர்முகத்தேர்வு



தமிழ் போக்குவரவுக் கழகம்

தமிழீழப் போக்குவரவுக்கழக மேற்பார்வையாளர் பணிக்கு விண்ணப்பம் செலுத்தியவர்களுக்கான நேர்முகத்தேர்வு 26. 07.2003, 27.07.2003ஆம் நாள் சனி,ஞாயிறு காலை 10.00 மணி தொடக்கம் பகல் 2.00 மணிவரை தமிழீழப் போக்குவரவுக்கழகம் – பேருந்துப்பகுதி புதுக்குடியிருப்பு பணிமனையில் நடைபெறும்.

மேற்படி பணிக்கு விண்ணப்பம் செய்தோர் கல்வித்தகைமை, அகவை ஆகியவற்றினை உறுதிப்படுத்தும் உரிய ஆவணங்களுடன் வருகை தருமாறு வேண்டுகின்றோம்.

முகாமையாளர்,
ஆளணி ஆளுகைப்பகுதி,
தமிழீழப்போக்குவரவுக்கழகம்,
நடுவப்பணிமனை,
விசுவமடு.

(சி-8440)

**NEIAP முல்லைத்தீவு**

# வடக்கு கிழக்கு நீர்ப்பாசன விவசாயத் திட்டம்
# கிராமம் கையளித்தல் வைபவ

# அழைப்பிதழ்

**துணுக்காய், கோட்டைகட்டி மையக்கிராமங்கள்**

காலம்: 26.07.2003
நேரம் : 01) மு.பகல் 10.00 மணி.
02) பி.பகல் 2.30 மணி.

இடம் : 01) துணுக்காய் பொதுநோக்கு மண்டபமுன்றல்
02) கோட்டைகட்டி பொதுநோக்கு மண்டபமுன்றல்

*அன்புடையீர்!*

*எமது நியாப் திட்டத்தின் மூலம் 2001 ஆம் ஆண்டுக்கெனத் தெரிவு செய்யப்பட்டு புனரமைப்புச் செய்யப்பட்ட கோட்டைகட்டி, துணுக்காய் ஆகிய மையக்கிராமங்களைக் கையளிக்கும் நிகழ்வில் தங்களை கலந்து சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.*

எந்திரி.ச.சு.சிவகுமார்
பிரதி திட்டப்பணிப்பாளரும்,
பணியாளர்களும்.
வடக்கு கிழக்கு நீர்ப்பாசன விவசாயத்திட்டம்(நியாப்)
முல்லைத்தீவு மாவட்டம்.

(சி-8441)

# புலிகள் முகாமிற்கு ஆயுதம் கொண்டுவரப்பட்டதாக தவறான தகவல் வழங்கியது கடற்படை அதிகாரியே

## - விசாரணையிலிருந்து தெரியவந்துள்ளதாக அறிவிப்பு

(கொழும்பு)

**திருகோணமலை மாவட்டத்திலுள்ள மணியரசன்குளத்தில் புலிகளால் புதிதாக அமைக்கப்பட்ட முகாமுக்கு கனரக ஆயுதங்கள் கொண்டுவரப்பட்டதாக கடற்படைக்குத் தவறான தகவல்களை வழங்கியவர் ஒரு கடற்படை சிரேஷ்ட அதிகாரியே என விசாரணைகளின் போது தெரியவந்துள்ளது.**

புலிகளின் பயிற்சி முகாமுக்கு கனரக ஆயுதங்கள் கொண்டுவரப்பட்டதாகக் கடற்படைக்கு வழங்கப்பட்ட தகவல்களை அடுத்து இராணுவமும் விமானப்படையும், உளவுத்துறையினரும் விசாரணைகளை மேற்கொண்டதாக தெரிவிக்கப்படுகிறது.

கனரக ஆயுதங்கள் பற்றி ஊடகங்கள் செய்தி வெளியிட்டதைத் தொடர்ந்து பாதுகாப்பு அமைச்சின் செயலாளரும் இது பற்றி விசாரணைகளை மேற்கொண்டிருந்தார்.

அத்துடன் கடற்படையின் கிழக்குப் பிராந்திய கட்டளைத் தளபதியிடமிருந்தும் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஒஸ்ரின் பெர்னாண்டோ அறிக்கை கோரியிருந்தார்.

இந்த விசாரணைகளிலிருந்தே பொய்யான தகவல்களை கடற்படை அதிகாரி கொழும்பில் நின்றே வழங்கியதாகவும், இவருக்கு எதிராக விசாரணைகள் நடத்தப்படவுள்ளதாகவும் பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

# ஜப்பானிய விசேட தூதுவரின் இல.விஜயம் மீண்டும் ஒத்திவைப்பு

(கொழும்பு)

ஜப்பானிய விசேட தூதுவர் யசூசி அகாஷியின் இலங்கை விஜயம் ஒத்திவைக்கப்பட்டுள்ளதாக ஜப்பானியத் தூதரக வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இலங்கை அரச தரப்பினரையும் விடுதலைப்புலிகளையும் சந்திப்பதற்காக யசூசி அகாஷி இம்மாத பிற்பகுதியில் இலங்கை வரவிருந்தார்.

எனினும், சமாதானப் பேச்சுக்களில் விடுதலைப் புலிகள் மீண்டும் கலந்துகொள்ளும்நிலை உருவாகிய பின்னர் இந்தச் சந்திப்பை மேற்கொள்வதே பொருத்தமானதென ஜப்பான் கருதுவதாலேயே அகாஷியின் விஜயம் பிற்போடப்படுவதாகத் தூதரக வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

டோக்கியோவில் நடைபெற்ற இலங்கைக்கு உதவி வழங்கும் நாடுகளின் மாநாட்டின் பின்னர் இலங்கை வர அகாஷி முயற்சிகளை மேற்கொண்டிருந்த போதிலும் இதுவரை அது சாத்தியப்படவில்லை.

இந்த நிலையிலேயே அகாஷியின் தற்போதைய விஜயமும் ஒத்திவைக்கப்பட்டுள்ளது. புலிகளை மீண்டும் பேச்சுக்களுக்கு அழைக்கும் முயற்சிகள் பயனளிக்கும் பட்சத்திலேயே அகாஷியின் இலங்கை விஜயத்திற்கான திகதி நிர்ணயிக்கப்படுமெனவும் தூதரக வட்டாரங்கள் தெரிவித்தன.

# ஐ. ஒன்றியத்தின் அபிவிருத்திப் பணி இலங்கையில் தொடர்ந்தும் இடம்பெறும்

ஐரோப்பிய ஒன்றியத்தால் இலங்கையில் மேற்கொள்ளப்பட்டுவரும் அபிவிருத்திப் பணிகள் தொடர்ந்து முன்னெடுக்கப்படும் எனக் கூறப்பட்டுள்ளது.

செவ்வாய்க்கிழமை யாழ். பல்கலைக்கழகத்தில் நடைபெற்ற சம்பவம் தொடர்பாக வெளியிட்ட அறிக்கையிலேயே இவ்வாறு கூறப்பட்டுள்ளது.

ஜேர்மன் தொழில்நுட்ப நிறுவனத்தினால் புனரமைப்புச் செய்யப்பட்ட பாடசாலைகளைக் கையளிக்கும் வைபவத்தில் பிரதமவிருந்தினராகக் கலந்துகொள்ள ஜெயலத்தைத் தாமே அழைத்ததாகவும், இதற்கு யாழ் பல்கலைக்கழக மாணவர்கள் எதிர்ப்புத் தெரிவித்து ஆர்ப்பாட்டம் நடத்தியதால் அங்கு நிகழ்வை நடத்த முடியவில்லை என்றும், பின்னர் நிகழ்வு ஜேர்மன் தொழில்நுட்ப நிறுவனத்தில் நடத்தப்பட்டது என்றும், இவ்வாறான நிகழ்வுகளை சமாதான சூழலில்தான் தாம் நடத்த விரும்புவதாகவும் ஏற்பாட்டாளர்கள் தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

பல்கலைக்கழக மாணவர்கள் இவ்வாறு செயற்பட்டமை அமைச்சர் ஜெயலத்திற்கு எதிராகவே தவிர தமக்கு எதிராக அல்ல என்று ஐரோப்பிய ஒன்றியம் வெளியிட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# அபி.லொத்தர் சபை குறித்த கேள்விகளுக்கு பதில் கூறும் தகுதி மொறகொடவுக்குண்டு

## -சபாநாயகர் ஜோசப் மைக்கல் பெரேரா தெரிவிப்பு

(கொழும்பு)

அமைச்சர் மிலிந்த மொறகொடவின் அமைச்சுப் பொறுப்புக்கள் மாற்றப்பட்டுள்ளதாக சனாதிபதி தமக்கு இன்னும் அறிவிக்கவில்லை. இதனால் அபிவிருத்தி லொத்தர் சபை தொடர்பான எந்த ஒரு கேள்விக்கும் பதிலளிக்கும் தகுதி பொருளாதார மறுசீரமைப்பு விஞ்ஞான தொழில்நுட்ப அமைச்சர் மிலிந்த மொறகொட மற்றும் கொள்கை அமுலாக்கல் துறைப் பிரதியமைச்சர் ஆகியோருக்கு உண்டெனச் சபாநாயகர் யோசப் மைக்கல பெரேரா தெரிவித்துள்ளார்.

நேற்றைய பாராளுமன்றக் கூட்டத்தில் மக்கள் பிரதிநிதி அகில நிமலசிறி ஜெயசிங்க முன்வைத்த கேள்வி ஒன்றுக்குப் பதிலளிக்க அமைச்சர் மொறகொட தயாரான வேளை, எதிர்க்கட்சியினர் இடைமறித்தனர். இதனைத் தொடர்ந்து சபாநாயகா இவ்வாறு கூறியுள்ளார்.

அபிவிருத்தி லொத்தர் சபை சனாதிபதியின் பொறுப்பில் கொண்டுவரப்பட்டுள்ளதால் இக் கேள்விக்குப் பதிலளிக்கும் உரிமை மொறகொடவிற்கு இல்லையெனப் பாராளுமன்ற உறுப்பினா ஜெயராஜ் பர்னாண்டோ புள்ளே வாதிட்டுள்ளார். உரிய வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்படாவிட்டாலும், அபிவிருத்தி லொத்தர் சபையின் நடவடிக்கைகள் சனாதிபதியின் பொறுப்பில் மேற்கொள்ளப்படுவதாக அவர் கூறியுள்ளார்.

ஆனால், பாராளுமன்றத்திற்கு இதுபற்றி உத்தியோகபூர்வமாக அறிவிக்கவில்லையெனச் சபாநாயகர் கூறியுள்ளார். பின்னர் சம்பந்தப்பட்ட கேள்விக்குப் பதிலளிக்கும் வாய்ப்பை மொறகொடவிற்கு வழங்க சபையில் தீர்மானிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# இத்தாலி செல்லும் நோக்கில் கல்கிசையில் தங்கியிருந்த 220 பேர் பொலிசாரால் கைது

(கொழும்பு)

சட்டவிரோதமாக இத்தாலிக்குச் செல்லும் நோக்கில் இலங்கையில் தங்கியிருந்த மற்றுமோர் வெளிநாட்டவர் குழுவொன்று கைதுசெய்யப்பட்டுள்ளது.

கல்கிசையில் நடத்திய திடீர் சோதனையின் போது 220 பேர் கைது செய்யப்பட்டுள்ளதாக கல்கிசை பொலிஸ் நிலையத்தைச் சேர்ந்த சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் துஷாரட்ண தெரிவித்துள்ளார்.

இக்குழுவில் இந்தியர்களும், பங்களாதேஷ் பிரஜைகளும் அடங்குகின்றனர்.

இவர்களில் ஒருவரேனும் கடவுச்சீட்டுக்களையோ விசா அனுமதிப் பத்திரங்களையோ வைத்திருக்கவில்லையென அவர் மேலும் கூறியுள்ளார்.

# உணவு கேட்டு அமெ. தூதரகம் முன்பாக லைபீரிய மக்கள் ஆர்ப்பாட்டம்

உள்நாட்டுப்போரால் பாதிக்கப்பட்டுள்ள லைபீரிய நாட்டில் உணவு கேட்டு பொதுமக்கள் அங்குள்ள அமெரிக்கத் தூதரகம் முன்பு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

ஆபிரிக்க நாடான லைபீரியாவில் கடந்த 03 ஆண்டுகளாக உள்நாட்டுப்போர் நடைபெற்று வருகின்றது. அரசு படைகளுக்கும் கிளர்ச்சியாளர்களுக்கும் இடையே நடைபெற்றுவரும் இந்த மோதலால் நாட்டின் பொருளாதாரம் வீழ்ச்சியடைந்துள்ளது.

இந்த உள்நாட்டுப் போரினால் கடந்த ஐந்து தினங்களில் நடைபெற்ற சண்டையில் ஆயிரக்கணக்கானோர் கொல்லப்பட்டுள்ளனர்.

வறுமையும் பஞ்சமும் ஏற்கனவே நிலவும் இந்த நாட்டில் உணவின்றிப் பலர் உயிரிழந்துள்ளனர். இந்நிலையில் தலைநகர் மொன்ரோவியாவிலுள்ள அமெரிக்கத் தூதரகம் முன்பு ஆயிரக்கணக்கான மக்கள் உணவுகேட்டுக் கோஷமிட்டனர்.

பசியில் வாடும் தங்களுக்கு உடனடியாக அமெரிக்கா உணவுப் பொருட்களை அனுப்பிவைக்க வேண்டுமென்று அவர்கள் கோஷமிட்டனர்.

இப்போராட்டத்தின் போது வன்முறைகள் நிகழாது தடுக்க பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டிருந்தது.

# இந்தியா – பாகிஸ்தானுக்கிடையே விமான,ரயில் சேவையை ஆரம்பிக்க முயற்சி

(புதுடில்லி)

இந்திய-பாகிஸ்தானிடையேயான ரயில் போக்குவரத்து அடுத்த மாதம் மீண்டும் தொடங்கும் என பாகிஸ்தான் சுற்றுலா பயணிகள்துறை அமைச்சர் கூறியுள்ளார்.

இந்திய நாடாளுமன்றம் மீது பாகிஸ்தான் தீவிரவாதிகள் கடந்த 2001 இல் நடத்திய தாக்குதலை அடுத்து இருநாட்டு உறவில் விரிசல் ஏற்பட்டது.

இருநாடுகளுக்குமிடையே பேருந்து, ரயில், விமானப் போக்குவரத்துக்கள் நிறுத்தப்பட்டன.

பிரதமரின் சமாதான நடவடிக்கையின் முதல்கட்டமாக தூதரக உறவுகள் ஏற்பட்டுள்ளன. தொடர்ந்து பேருந்துப் போக்குவரத்தும் தொடங்கியுள்ளது.

இந்நிலையில் பாகிஸ்தான் சுற்றுலாத்துறை அமைச்சர் முனீர் அகமத், இந்தியா- பாகிஸ்தானிடையே ஓடிக் கொண்டிருந்த எக்ஸ்பிரஸ் ரயிலை மீண்டும் இயக்குவதற்கான அனைத்து ஏற்பாடுகளும் முடிவடைந்துவிட்டதாகக் கூறியுள்ளார்.

ரயில் போக்குவரத்தைத் தொடங்க இந்தியாவும் ஒப்புக்கொண்டிருப்பதால், அடுத்த மாதம் ரயில் போக்குவரத்துத் தொடங்கும் எனக் கூறியுள்ளார்.

விமானப் போக்குவரத்தும் தொடங்கும் திட்டத்தை இந்திய அரசுக்கு பாகிஸ்தான் பிரதமர் ஜமாலி அனுப்பியுள்ளதாகவும் அதன்படி டில்லி, மும்பாய் நகரங்களுக்கு விமானப் போக்குவரத்திற்கு கொள்கையளவில் முடிவு எடுக்கப்பட்டுள்ளதாகவும் முனீர் அகமத் கூறியுள்ளார்.

# இந்திய-பாக். பிணக்கைத் தீர்க்க அமெ. மத்தியஸ்தம் வகிப்பது பயனுள்ளது

## - அமெ.வெளியுறவுத்துறை அமைச்சர் கருத்து

(வாஷிங்டன்)

தெற்காசியப் பிராந்தியத்தில் இந்தியாவும் பாகிஸ்தானும் இணைந்து அமைதியை உருவாக்கும் என்று அமெரிக்க வெளியுறவுத்துறை அமைச்சர் கொலின் பவல் நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

அமெரிக்கப் பத்திரிகை ஒன்றிற்குப் பேட்டியளித்த கொலின் பவல், ஜம்மு காஷ்மீர் மாநிலத்தில் பல்வேறு வன்முறைச் சம்பவங்கள் நடைபெற்றாலும் இந்தியாவும் பாகிஸ்தானும் அமைதி முயற்சியை மேற்கொள்ளும் என்று கூறியுள்ளார்.

வெளியுறவுத்துறை அமைச்சர் ஜஸ்வந்சிங்குடன் தாம் தொடர்புகொண்ட போது, இருநாடுகளிடையேயும் பேருந்து போக்குவரத்து தொடங்கியது, தூதர்கள் நியமனம் என்பன குறித்துப் பேசியதாகவும் கூறியுள்ளார்.

இருநாடுகளிடையே பிரச்சினையைத் தீர்க்கும் மத்தியஸ்த நிலைக்கு அமெரிக்காவை அனுமதிப்பது பயனுள்ளதாக இருக்கும் என்றும் அவர் கூறியுள்ளார்.

# அவுஸ்.தலைமையிலான அமைதிப்படை சொலமன் தீவில் தரையிறக்கம்

அவுஸ்திரேலியா தலைமையிலான அமைதிகாக்கும் படைகள சொலமன் தீவுகளில் தரையிறங்கத் தொடங்கியுள்ளன.

ஆயுதபாணிகளான பூர்வீக கிளர்ச்சியாளர்களின் ஆயுதங்களைக் களைவதும், சீர்குலைந்துள்ள இந்நாட்டில் சட்டத்தையும் ஒழுங்கையும் நிலைநாட்டுவதும் இப்படையின் நோக்கமாகும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. தென்பசுபிக் பிராந்தியத்தில் 2ஆம் உலக யுத்தத்திற்குப் பின்னர் இத்தகைய பாரிய படையொன்று நிலைநாட்டப்படுவது இதுவே முதற்தடவையாகும்.

இவ் அமைதிகாக்கும் படையில் நியூசிலாந்து, பிஜி, போன்ற நாடுகளைச் சேர்ந்த துருப்புக்களும் இணைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.




சதாம் ஹுசைனின் புதல்வர்கள் இருவர் கொல்லப்பட்ட செய்தியை செய்தித்தாள்களில் படிக்கும் ஈராக்கிய மக்கள்

## -ஜம்மு காஷ்மீரில்-

# பக்தர்கள் மீதான தாக்குதலுக்கு உலகத் தலைவர்கள் கண்டனம்

ஜம்மு-காஷ்மீர் மாநிலத்தில் வைஷ்ணவதேவி ஆலயத்திற்குச் சென்ற பக்தர்கள் மீது பாகிஸ்தான் தீவிரவாதிகள் நடத்திய தாக்குதலுக்கு ஐநா சபை பொதுச்செயலாளர் கோபி அனான், அமெரிக்க சனாதிபதி புஷ், ரஷ்ய சனாதிபதி புட்டின், பிரிட்டிஷ் பிரதமர் ரொனி பிளேயர், பாகிஸ்தான் சனாதிபதி முஷாரப் ஆகியோர் கண்டனம் தெரிவித்துள்ளனர். கடந்த திங்கட்கிழமை இடம்பெற்ற இத் தாக்குதலில் 07 யாத்திரிகர்கள் கொல்லப்பட்டதோடு 42 பேர் காயமடைந்தமை தெரிந்ததே.

# இலங்கை-இந்தியாவிற்கிடையில் பாலம் அமைக்கும் திட்டத்திற்கு ஜெயலலிதா எதிர்ப்பு

## கச்சதீவையும் குத்தகைக்குப் பெற்றுத் தரக் கோரிக்கை



(சென்னை)

இந்தியாவிற்கும் இலங்கைக்குமிடையே பாலம்கட்டி இரு நாடுகளிடையே நில வழித் தொடர்பு ஏற்படுத்தும் மத்திய அரசின் திட்டம் தேசப் பாதுகாப்பிற்குப் பெரும் அச்சுறுத்தலை விளை விக்கும் என்பதால், அந்தத் திட்டத்தைச் செயற்படுத்த வேண்டாமென்று தமிழ்நாடு முதலமைச்சர் ஜெயலலிதா கூறியுள்ளார்.

இது தொடர்பாக ஜெயலலிதா, இந்தியப் பிரதமர் வாஜ்பாயிற்கு எழுதிய கடிதத்தில்,

கடந்த ஆண்டு யூன் மாதம் 11 ஆம் திகதி. சிறிலங்காப் பிரதமருடன் பிரதமர் வாஜ்பாய் சந் தித்துப் பேசியதைத் தொடர்ந்து வெளியிடப்பட்ட கூட்டு அறிக்கையில் இந்தியா - இலங்கையிடையே பாலம் கட்டும் திட்டம் இடம் பெற்றிருப்பதையும், இதற்கான ஆய்வுப் பணியை மத்திய திட்டக் குழுவும் சிறிலங்கா அரசும் தொடங்குவது என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

இதன் பின்னர் இருநாட்டு அமைச்சர்கள் மட் டத்தில் நடைபெற்ற கூட்டத்தில் ஏற்பட்ட முடிவின்படி பாலம் கட்ட தமிழகத்தின் கருத்துக் கேட்கப்பட்டிருக்கின்றது.

தமிழகத்தில் விடுதலைப்புலிகளின் கடந்த கால செயல்களைக் கவனத்தில் கொண்டும், தற்போது சிறிலங்கா அமைதிப் பேச்சு வார்த்தையில் எந்த முடிவு எடுக்கப்படும் என்பது தெரியாத நிலையிலும் இந்தியாவுக்கும் இலங் கைக்குமிடையே பாலத் தைக் கட்டி, நில ரீதியாக இணைப்பை ஏற்படுத்துவது உசிதமாக இருக்காது. இதனால், இந்தத் திட்டத்தை ஒட்டு மொத்தமாக எதிர்க்கின்றேன். பாலம் கட்டுவதால் பொருளாதார ஒத்துழைப்பு ஏற்படும் என்று மட்டும் மத்திய திட்டக்குழு கருதக்கூடாது.

இதில் தேசப் பாதுகாப்பு என்ற முக்கிய பிரச்சினையும் இடம் பெற்றுள்ளது என்றும் சுட்டிக் காட்டியுள்ளார்.

எனவே தேசப் பாதுகாப்பை நிலைகுலைய வைக்கும் இந்தத் திட்டத்தை தொடரக்கூடாது என தாம் கேட்டுக் கொள்வதாகவும், இது பற்றி மத்திய திட்டக்குழுவும் கருத்தில் கொள்ள வேண்டும் என்றும் தெரிவித்துள்ளார்.

அது போன்று இலங்கை இந்தியா இடையே படகுச் சேவையைத் தொடங்க இது சரியான நேரமல்ல என்றும் கூறியுள்ள ஜெயலலிதா,

தேசப்பாதுகாப்புப் பிரச்சினையில் சமரசம் செய்து விடக்கூடாது என்பதால் இது குறித்துப் பிரதமர் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் வலியுறுத்தியுள்ளார்.

இரு நாடுகளிடையே நல்லுறவு நீடிக்கவும், தமிழக மீனவர்களின் நலம் காக்கவும் கச்சதீவை நிரந்தரக் குத்தகை அடிப்படையில் இந்தியாவுக்குப பெற்றுத்தர வேண்டும் என ஜெயலலிதா கேட்டுள்ளார்.

இதனை அவர் பிரதமர் வாஜ்பாயிக்கு எழுதிய கடிதத்தில் தெரிவித்துள்ளார். இவ்வாறு பெறப்படும் போது ராமநாதபுரம் மாவட்ட மீனவர்கள் தங்கள் வலைகளை அங்கு உலர்த்துவதுடன், சுற்றுலாப் பயணிகளும் செல்ல முடியும் என்றும் தெரிவித்துள்ளார்

அதேநேரம் இலங்கையின் இறையாண்மையும் பாதிக்கப்படாத வகையில் நாகபட்டினம், தஞ்சாவூர், புதுக்கோட்டை மீனவர்கள் இலங்கை கடல் எல்லைக்குள் ஐந்து கடல் மைல்தொலைவிற்குச் சென்று மீன்பிடிக்க லைசன்ஸ் முறையை சிறிலங்கா அரசு அனுமதிக்க வேண்டும் என்றும் யோசனை தெரிவித்துள்ளார்.

இந்த இரு யோசனைகளையும் தீவிரமாகப் பரிசீலிக்குமாறு பிரதமரைத் தமிழக முதலமைச்சர் கேட்டுக் கொண்டுள்ளார்.

# குடத்தனையில் வான் தடம்புரண்டது; சாரதி உட்பட 7 பேர் படுகாயம்!

வடமராட்சி கிழக்கு, குடத்தனைப் பகுதியில் நேற்று முன்தினம் வான் ஒன்று தடம்புரண்டதில் அதில் பயணம் செய்த சாரதி உட்பட 07 பேர் படுகாயமடைந்துள்ளனர்.பருத்தித்துறை-குடத்தனை வீதியில் 06 ஆம் கட்டையடியில் நேற்று முன்தினம் பிற்பகல் 3.30 மணியளவில் இவ் விபத்து நடைபெற்றுள்ளது.பருத்தித்துறையிலிருந்து குடத்தனை நோக்கிச் சென்றவேளை வானில் "றொட்" உடைந்ததால் இச்சம்பவம் ஏற்பட்டுள்ளது.

குடத்தனையைச் சேர்ந்த அந்தோனிப்பிள்ளை சுபாஜினி (வயது-18). அந்தோனிப்பிள்ளை டிலக்ஷிகா(வயது-21), மரியதாஸ் அமலதாஸ் (வயது-45), சுந்தரலிங்கம்இராசபூபதி (வயது-50), தனபாலசிங்கம் மகேஸ்வரி (வயது-65), மிக்கேல்பிள்ளை சவரிமுத்து (வயது-66) ஜெயபாலன் விக்ரோறியா (வயது41) ஆகியோரே படுகாயமடைந்தவர்களாவர். இவர்களில் ஒருவரின் நிலை கவலைக்கிடமாக இருப்பதாகத் தெரியவருகிறது.


## உலர் நிவாரண மீளாய்வு

கடந்த மாதம் உலர் நிவாரண மீளாய்வின்போது பலர் பல்வேறு காரணங்களினால் மீளாய்விற்கு சமுகங்கொடுக்க வில்லை எனவும், இதன் காரணமாக நிவாரணம் கிடைக்க வில்லை எனவும் எனக்கு முறையிட்டிருக்கின்றார்கள். நிவாரணம் பெறத் தகுதியுடைய ரூபா 2500 இற்கு உட்பட்ட வருமானங்களை உடையவர்கள் மீளாய்விற்கு சமுகங் கொடுக்க முடியாத காரணத்தினை விரிவாக விளக்கிய கடிதத் தினை கிராம சேவையாளருக்குச் சமர்ப்பித்து, கிராம சேவை யாளர் வருமானத்தினை உறுதிப்படுத்திய கடிதத்துடன், தங்கள் பகுதி உதவி அரச அதிபர் பணிமனைக்குச் சென்று நிவாரணத்திற்குரிய அட்டைகளைப் பெற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

ரூபா 2500 இற்கு மேற்பட்ட வருமானமுடையவர்களுக்கு அரச சுற்றுநிருபத்திற்கிணங்க நிவாரணம் வழங்க முடியாதுள்ளதை இடம்பெயர்ந்தோர் கவனத்திற்குக் கொண்டு வருகின்றேன்.

**தி. இராசநாயகம்,**
அரச அதிபர்,
கிளிநொச்சி மாவட்டம். (சி-8237)



## சாவு அறிவித்தல்

## அமரர் சின்னப்பு கார்த்திகேசு

பூநகரி நல்லூரை பிறப்பிடமாகவும், கந்தபுரத்தை வசிப்பிடமாகவும் கொண்ட, கரும்புத்தோட்டம் கண்ணகையம்மன் ஆலய பூசகரும், குஞ்சுப்பரந்தன் பொறிக்கடவை கண்ணகையம்மன் முன்னைநாள் பூசகருமான சின்னப்பு கார்த்திகேசு பூசகர் 23.07.2003 அன்று சிவபதம் அடைந்தார். அன்னார் சிவத்திரு கருணானந்தன், பஞ்சாட்சரம், விக்கினேஸ்வரராசா, நடேசலிங்கம் புவனேஸ்வரி, காலஞ்சென்ற கெங்காதேவி, திலகவதி, இராசபூபதி, இராஜேஸ்வரி ஆகியோரின் தகப்பனாரும், தம்பு, பாலசுந்தரம், ஜெயராசன், அருணாசலம், காலஞ்சென்ற சிவயோகம் சந்திராதேவி, சற்குணநாதன் தயாராணி, காலஞ்சென்ற புஸ்பராணி ஆகியோரின் மாமனாரும் ஆவார். அன்னாரின் இறுதிக்கிரியைகள் 24.07.2003 அன்று (இல.14, கந்தபுரம்) அவரின் இல்லத்தில் நடைபெற்று கந்தபுரம் இந்து மயானத்தில் தகனம் செய்யப்பட்டது.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

**தகவல்:**
**மனைவி, பிள்ளைகள்.**

(சி-8238)


## வீதி விபத்தில் ஒருவர் காயம்

(அலுவலக செய்தியாளர்)

கிளிநொச்சி நகரப் பகுதியில் இடம்பெற்ற வீதி விபத்தில் ஒருவர் காயமடைந்துள்ள நிலையில் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

கிளிநொச்சி புகையிரத பாதையூடாகச் செல்லும் வீதியில் நேற்று முன்தினம் பகல் 12.30 மணியளவில் துவிச்சக்கர வண்டியுடன் மோட்டார் சைக்கிள் மோதி விபத்துக்குள்ளானதில் துவிச்சக்கரவண்டியில் பயணம் செய்த கணேசநாதன் என்பவரே காயமடைந்தவராவார் (பா)

### குரங்குப்...

தலைமைச் செயலகம் இதில் அறிவித்திருந்தது. அதனையடுத்து இது தொடர்பாக எழுத்து மூலமாக அறியத் தருமாறு கண்காணிப்புக் குழுத் தலைவர் புலிகளிடம் கேட்டிருந்தார். அத்துடன் இது தொடர்பாக அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வன் அவர்களுடன் மேலும் பேச்சுவார்த்தைகளை நடத்தவும் அவர் நேரம் ஒதுக்குமாறு கேட்டிருந்தார்.

ஆனால், நேற்று (வியாழன்) காலை விடுதலைப் புலிகளின் தலைமை அலுவலகத்திலிருந்து எமக்குக் கிடைத்த தகவலின்படி தமிழ்ச்செல்வன் அதிக வேலைப் பழுவுடன் இருப்பதாகவும், அதனால் போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுத் தலைவரைச் சந்தித்துப் பேசுவதற்கு முடியாது என்றும் கூறப்பட்டது.

ஆகவே, திட்டங்கள் மாற்றப்பட்டன. கிளிநொச்சிக்கான பயணம் இரத்துச் செய்யப்பட்டுவிட்டது.

புலிகளின் அறிவிப்பிற்கு எமது பதில் எழுத்து மூலமாக அறிவிக்கப்படும்.

குரங்குப்பாஞ்சான் முகாம் தமது கட்டுப்பாட்டுப் பகுதியிலேயே உள்ளது. இதனை அகற்றுவதற்கு எந்த விதமான காரணமும் கிடையாது என்று புலிகள் தெரிவித்துள்ளனர். அந்த முகாமை அகற்றவும் அவர்கள் மறுத்துவிட்டனர்.

போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழு தலைவரிடமிருந்து தமிழ்ச்செல்வன் அவர்களுக்கு அனுப்பப்படவுள்ள பதில் கடிதத்தில் என்ன கூறப்படவுள்ளது என்பதை நாம் பொறுத்திருந்து தான் பார்க்க வேண்டும். ஆனால், இரண்டு தரப்பில் ஏதாவது ஒரு தரப்பு கண்காணிப்புக் குழுவின் தீர்ப்பினை ஏற்க மறுப்பதாக கூறுவது மிகவும் ஒரு கடுமையான விசயமாகத் தான் எம்மால் எடுத்துக்கொள்ளப்படும்.

இதை நாங்கள் போர் நிறுத்த ஒப்பந்தத்தை தெளிவாக மீறும் ஒரு செயலாகத்தான் பார்க்க வேண்டும் என்று கூறினார்.

# "புலத்திலிருந்து ஒரு தமிழீழக் குயில்" இசைத் தட்டு வெளியீட்டு விழா

விடுதலைப் புலிகள் கலை பண்பாட்டுக் கழகம் நடாத்தும் "புலத்திலிருந்து ஒரு தமிழீழக் குயில்" இசைத் தட்டு வெளியீட்டு விழா நாளை மாலை 4.00 மணிக்கு வள்ளிபுனத்திலுள்ள செஞ்சோலையில் நடைபெறவுள்ளது. நோர்வேயில் வாழும் தமிழீழச் சின்னக்குயில் அர்ச்சனா ஆனந்தகரனின் இந்த இசைத் தட்டு வெளியீட்டு விழாவிற்கு புதுவை இரத்தினதுரை தலைமை தாங்கவுள்ளார்.

## மன்னார் மாவட்டத்தில்

# சூழல் மாசடைவதைத் தடுக்க மணல் அகழ்வதற்குத் தடை

(மன்னார்)

மன்னார் மாவட்டத்தில் சூழல் மாசடைவதைத் தடுக்கும் நோக்கில் மன்னாரில் இம்மாதம் 31ஆம் திகதி முதல் மணல் அகழ்வது முற்றாகத் தடை செய்யப்பட்டுள்ளது. இதற்கான எந்தவித அனுமதிப் பத்திரமும் வழங்கப்படமாட்டாது என்று மன்னார் அரச அதிபர் தெரிவித்துள்ளார்.இது இவ்வாறிருக்க அனுமதிப்பத்திரத்துடன் அருவி ஆற்றில் மாத்திரமே மணல் அகழலாம் எனவும் அரச அதிபர் தெரிவித்துள்ளார். (மி)

# கிளி. மாவட்டத்தில் கூட்டுறவு ஆய்வரங்கு

(அலுவலக செய்தியாளர்)

81ஆவது சர்வதேச கூட்டுறவுத் தின விழாவினை முன்னிட்டு கிளி மாவட்ட கூட்டுறவுச் சபையினரால் கூட்டுறவு ஆய்வரங்கு இன்று நடாத்தப்பெறவுள்ளது.

கிளி. மாவட்ட கூட்டுறவுச் சபைத் தலைவர் அ. கேதீஸ்வரன் தலைமையில் கிளிநொச்சியில் அமைந்துள்ள வட பிராந்திய பாரஊர்திகள் உரிமையாளர்கள் கூட்டு றவுச் சங்க மண்டபத்தில் நடைபெறவுள்ள மேற்படி ஆய்வரங்கில் சிரான் செயலகப் பணிப்பாளர் இரேனியஸ் செல்வின், கெயர் நிறுவன இணைப்பாளர் தேவதாஸ், அபிவிருத்தி உத்தியோகத்தர் அமலதாஸ், கிளி. மாவட்ட கூட்டுறவுச் சபைத் தலைவர் கேதீஸ்வரன் ஆகியோர் ஆய்வுக் கருத்துரைகளை வழங்கவுள்ளனர்.

மேற்படி ஆய்வரங்கில் கிளி. மாவட்ட பல நோ. கூ. சங்கங்களின் தலைவர்கள், பொது முகாமையாளர்கள், வர்த்தக முகாமையாளர்கள், கணக்காளர்கள், கல்வி உத்தியோகத்தர்கள் ஆகியோரைத் தவறாது கலந்து கொள்ளும் வண்ணம் கிளி. மாவட்ட கூட்டுறவுச் சபைத் தலைவர் வேண்டியுள்ளார். (சோ)

### இடைக்கால...

சனாதிபதிக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ள நிலையில் இது குறித்து ஆராய்ந்து வரும் சனாதிபதி அதற்கான பதிலை இன்று அனுப்புவார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

அரசின் திட்டவரைவு போதிய தெளிவில்லாமல் இருப்பதாகவும் எனவே அது தொடர்பான தெளிவைப் பெற்றுக்கொள்ள லக்ஷ்மன் கதிர்காமர் பிரதமர் ரணிலுடன் பேச்சு நடத்தவுள்ளதாகவும் அறிவிக்கப்படுகிறது.

### பாராளு...

பத்தை நழுவவிட வேண்டாம் என பிரதமர் கட்சித் தலைவர்களுக்கு வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இதனைத் தாங்கள் நிராகரிக்கவில்லை என்றும் இது பற்றி பரிசீலித்து வருவதாகவும் எதிர்க்கட்சிகளின் தலைவர்கள் தெரிவித்துள்ளனர்.

அமைச்சர் டபிள்யூ. கே. எம். லொக்கு பண்டார கருத்து வெளியிடுகையில், அமைச்சு பதவி கிடைக்காத ஆளும் கட்சி பாராளுமன்ற அங்கத்தவர்களுக்கும் இந்தக் கண்காணிப்புக் குழு தலைவர் பதவிகள் வழங்கப்பட வேண்டும் எனத் தெரிவித்தார்.

### றோலர்களை...

பெரும் சிரமங்களை மீனவர்கள் எதிர்கொள்வதாக அம்முறைப்பாட்டில் சமாசத் தலைவர் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக சிறிலங்காவின் மீன்பிடி அமைச்சர், பாதுகாப்பு அமைச்சர், மனித உரிமை ஆணைக்குழு ஆகியவற்றிற்கு முறைப்பாடு செய்தும் இது வரை எந்தவித சாதகமான முடிவுகளும் தமக்குத் தரவில்லை என அவர் கவலை தெரிவித்துள்ளார். (33)

### நுணாவில்..

பிரிவு காரியாலயத்திற்கு அண்மையிலும் நுணாவில் 522ம் பிரிகேட் தலைமையகத்தை அண்டிய பகுதிகளிலும் புதிய காவலரண்களும் முட்கம்பி வேலிகளும் அமைக்கப்பட்டு படையினர் பாதுகாப்பு கடமையில் ஈடுபட்டுள்ளனர்.

இதேவேளை தனங்கிளப்பு, புளியங்கூடல் ஆகிய பகுதிகளிலும் புதிய புதிய காவலரண்களை அமைத்து வரும் படையினர் போர்ப் பயிற்சிகளிலும் ஈடுபட்டு வருகின்றனர். (33)

### வடமராட்சி...

களைக் கண்டு அவர்களை தடுத்து நிறுத்தும் நோக்கில் கரையில் இருந்து புறப்பட்ட போது அங்கிருந்து இந்திய மீனவர்கள் விலகிய போதும் கடற்படையினர் விதித்துள்ள பத்து மணிக்கு கரை திரும்ப வேண்டும் என்ற நிபந்தனையால் அன்றைய இரவைக் கடலில் கழிக்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. இது தொடர்பாக சமாசச் செயலாளர் போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழு, இந்திய அரசு கடற்படைத் தளபதி, கடற்றொழில் அமைச்சு, பாதுகாப்பு அமைச்சு ஆகியவற்றிற்கு மகஜர்களை அனுப்பி வைத்துள்ளது. (33)


## தேவை

கிளிநொச்சியில் இயங்கும் நிறுவனமொன்றிற்கு பின்வரும் பணிகளுக்கு ஆட்கள் தேவை.

**அலுவலக உதவியாளர்**

**பாதுகாப்பு உத்தியோகத்தர்கள்**

கிளிநொச்சிப் பகுதியில் வசிப்பவர்கள் விரும்பத்தக்கது.

விண்ணப்பதாரிகள் எதிர்வரும் 30 – 07 – 2003 புதன்கிழமை காலை 10.00 மணிக்கு ஜெயந்தி நகரில் உள்ள ஈழநாதம் பணிமனைக்கு வருகை தருமாறு வேண்டப் படுகின்றனர்.

(இ)


இப்பத் திரிகை கிளிநொச்சி ஈழநாதம் பணிமனையில் 2003ம் ஆண்டு யூலை மாதம் 25 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது